From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 204/2021

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : Sonaimuthu | Father/Husband Name | : Durai |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 29.01.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the day of 2025.

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் தற்போது மேலவளவு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 03.09.2021ம் தேதி 20.00 மணியளவில் நான் மேலூர் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது மேலூர் டவுன் கடலைக்கார தெருவை சார்ந்த கருப்பையா மகன் சுப்பிரமணி என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து அதை படித்து காண்பித்து புகார்தாரரிடம் கையொப்பம் பெற்று மேலூர்காவல் நிலைய குற்ற எண் 554-2021 இதச பிரிவு 387ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **( அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அந்த முதல் தகவல் அறிக்கையும், வாதியின் புகாரையும் இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரிக்கு எதிரான குற்றசாட்டு அற்றுபோய்விட்டது.**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை:**

அசா1 என்னிடம்தான் புகார் வாக்குமூலம் கொடுத்தார். அவர் சொல்ல சொல்ல நான் எழுதி அவருக்கு படித்து காண்பித்தேன். அசா1 கொடுத்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலத்தை நான் எழுதி, அவரிடம் படித்து காட்டினேன் என்று சொல்வதால் நான் தற்போது இந்த நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் என்னால் எழுதி காட்டப்பட்ட கையெழுத்திற்கும் அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் புகார் வாக்குமூலம் நீண்ட காலத்திற்கு முன்பு எழுதப்பட்டதால் எனது கையொப்பம் தற்போது மாறுபட்டு காணப்படுகிறது. புகார் வாக்குமூலத்தை நான் எழுதவில்லை என்றாலும், அசா1

என்னிடம் புகார் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக நான் புகார் வாக்குமூலம் எழுதியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல்அறிக்கையில் காலம் 9ல் களவாடப்பட்ட அல்ல களவிற்குள்ளான சொத்தின் விவரம் எதுவும் காட்டப்படவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் செக்கடி பக்கத்தில் சம்பவம் நடந்ததாக காணப்படுகிறது என்றால் சரியல்ல செக்கடி நோக்கி அனிதா கலப்பை கம்பெனி அருகே நடந்து வந்துகொண்டிருந்தபோது சம்பவம் நடந்ததாக காணப்படுகிறது. அனிதா கலப்பை கம்பெணயிலிருந்து காவல் நிலையத்திற்கு எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1 கி.மீ இருக்கும்.

2) அனிதா கலப்பை கம்பெனி எங்கு உள்ளது என்றால் நான் சம்பவம் இடம் செல்லவில்லை என்பதால் எனக்கு தெரியவில்லை. நான் மேலூர் காவல் நிலையத்தில ் சிறப்பு சார்பு ஆய்வாளராக 4 ஆண்டுகளாக பணியாற்றி உள்ளதால் மேலூர் காவல் நிலையத்திற்கு அருகே ஒரு கி.மீ. தூரத்தில் உள்ளதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள் அனிதா கலப்பை கம்பெனி எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது என்று சொல்வது இந்த வழக்கிற்காக என்னால் சொல்லப்படும் பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. அனிதா கலப்பை கம்பெனி எங்கு உள்ளது என்று தெரியாமல் எவ்வாறு மேலூர் காவல் நிலையத்திலிருந்து அந்த கம்பெனி ஒரு கி.மீ தூரத்தில் உள்ளது என்று நான் சொன்னேன் என்றால் புகாரில் அனிதா கலப்பை கம்பெனி அருகே சம்பவம் நடந்ததாக சொன்னதால் தோராயமாக நான் ஒரு கி.மீ இருக்கும் என்று முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளேன். அனிதா கலப்பை கம்பெனி மேலூரில் இல்லை என்றாலும், புதுசுக்காம்பட்டியில் உள்ளது என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து நடந்து வந்தால் மேலூர் காவல் நிலையத்தில் கால் மணிநேரத்தில் வந்தடையலாம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3) சம்பவம் நடந்ததாக சொல்லப்படுவது மாலை 06.00 என்று காணப்படுவதால் புகார் வாக்குமூலம் இரவு 08.00 மணிக்கு கொடுக்கப்பட்டதா காணப்படுவதாலும் இரண்டு மணி கால தாமதத்திற்கு சிறப்பு காரணம் எதுவும் முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆஜர் எதிரிக்கு இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எனது உயர் அதிகாரியின் நிர்பந்தத்தின்பேரில் புள்ளிவிவர கணக்கிற்காக இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

நான் சார்பு ஆய்வாளராக பதவி வகித்த நாள் முதல் இன்று வரை நான் பாதிக்கப்பட்டுதான் உள்ளேன் என்றால் சரிதான்.